குடி அரசு பதிப்பக வெளியீடு 4.

சுயமரியாதைத் தாலாட்டு.

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

1929.

குடி அரசு பதிப்பக வெளியீடு 4.

சுயமரியாதைத் தாலாட்டு

இராமநாதபுரம் ஜில்லா முத்துராமலிங்கபுரம்
சுயமரியாதைப் பாவலர்
அழகிய நல்லூர்
தி. அ. வெங்கடசாமி அவர்களால்
யாக்கப்பெற்றது.

"குடி அரசு" பதிப்பகத்தாரால்
வெளியிடப்பெற்றது.

விலை அணா 0-2-0

1929

Rights Reserved by the Publisher.

குமரன் பிரஸ்,
48, நெல்லுக்காரத் தெரு,
காஞ்சீபுரம்.

முகவுரை

"சுயமரியாதைத் தாலாட்டு" என்னும் இந்நூல் செய்தவர் கு. அழகிய நல்லூர் மதுரகவி அழகர்சாமி ரெட்டியாரவர்கள் அருமைப் புதல்வரும், அவரது முதல் மாணுக்கரும், பொய்யுடம்பகற்றி புகழுடம்பெய்திய திண்டுக்கல் தாலூகா போர்ட் தலைவர் உயர்திரு. சி. பொன்னுசாமி அவர்கள் ஆப்த நண்பரும், முத்து ராமலிங்கபுரம். ரெட்டி வாலிப சுயமரியாதைச் சங்க ஸ்தாபகரும் உயர்திரு வைக்கம் வீரரின் உத்தம சீடருமாகிய சுயமரியாதைப் பாவலர் தி. அ வெங்கடசாமி அவர்களாவர்.

இந்நூல் "குடி அரசு" "திராவிடன்" "ரிவோல்ட்" என்னும் உத்தமப் பத்திரிகைகளினதிபரும், ஏழை பங்காளரும், வைக்கம் வீரரும், "சுயமரியாதை" இயக்கத் தலைவருமாகிய ஈரோடு. உயர்திருவாளர். ஈ. வெ. இராமசாமி அவர்களின் ஜீவிய சரித்திர சாரத்தைச் சொல்லி வருவதுடன், அடிமைத்தனத்தாலும், அறியாமையாலும், குருட்டுநம்பிக்கையாலும், பிடிவாதம் என்கின்ற மயக்கத்தாலும், பயங்கொள்ளித்தனத்தாலும் எழ்மையுற்றிருக்கின்ற நம்மக்களை, முன்னேற வொட்டாமல் மாக்களெனப் பிடித்துப் பிணைத்து இறுக்கியிருக்கின்றதும், சுயநலக் குழுவினர்களாகிய சிலர்களாலாக்கப்பட்டு, பகுத்தறிவின்றிப் பலர்களாற் போற்றப்பட்டு வந்திருக்கின்றதுமாகிய ஜாதி பேதம், சமய பேதம், அதிலும் சாமி பேதம், சாஸ்திர பேதம், புராண பேதம் முதலிய வலைக்கட்டுகளை இலகுவில் அறுத்தெறியத்தக்க புதிய ஆயுதத்தைக் (சுயமரியாதையை) கொண்டு, அப்பெரியார்

(ஈ. வெ. இராமசாமி) அவர்கள் தம்முடல் நலமும், பொருள் நலமும், சுக நலமும் பேணுது, அதுவே சிந்தையாய்ப் பெருந்தகைமையுடன், தொண்டாற்றி வருகின்ற அரும் பெரும் செயல்களையும் விளக்கிக் கூறுகின்றது.

அன்றியும், படிப்போர், கேட்போர், மனம் கழிபே ருவகை கொள்ளத்தக்க அத்துணை இனிய மொழிகளால் யாக்கப்பெற்றும் அடிமைப் பிணியால் துன்புற்றுழலும் பெண்மக்கள் தங்குறைகளைத் தாமே தீர்த்துக்கொள்ள முன் வந்திடச் செய்யும் தூண்டுகோலாக நின்று அன்னுர் (பெண் மக்கள்) யாண்டும் சிந்தையில் வைத்து மக்கட்குத் துயிலூட் டும் தாலாட்டுப் பாட்டாக அமைக்கப்பெற்றிருப்பதும் மிக மிகப் போற்றற்குரியதாகும்.

மேலும், "சொல்லுதல் யார்க்கு மெளிய அரியவாம், சொல்லிய வண்ணஞ் செயல்" என்றபடி, இந்நூலாசிரியர், பெரியோர்களின் தயவைப் பெற வாய் வேதாந்தம் பேசி, வேடமிட்டுத் திரிபவர் அல்லர் என்பது இவரது ஆடம்பர மில்லா வாழ்க்கையிலிருந்தும், சொல்லியவண்ணம், தாம் செய்வதோடு, இன்னொருவரையும் செய்யும்படி இன்சொல் லால் அறிவு புகட்டி வருவதிலிருந்தும் நன்கு தெரியலாம்.

எனவே? இந்நூலாசிரியர், செய்துவரும் நன்றியைப் பாராட்டு முறையிலும், மக்கள் இடர்களை யொழித்துச் சமத்துவம் வழங்க ஆசைப்படுமுறையிலும், தாம் சமத்துவ மடைய விரும்பு முறையிலும், இந்நூலை ஆதரித்துப் பரப்ப வும், அதன்படி நடக்கவும் மக்கள் கடமைப்பட்டுள்ளார்கள் என்பதை யாம் கூறவேண்டியதில்லை யென்பது நம் துணிபு.

இங்ஙனம்,

க. அ. புன்னைமுத்து,

காரியதரிசி,

வாலிப நாடார் சங்கம்.

கல்லூரணி
2—3—29

சுயமரியாதைச் சுடரொளி

இரட்டையாசிரிய விருத்தங்கள்.

1. மனிதரெல் லாருமொரு சாதியே யென்கின்ற
வாசகம் பரவவேண்டும்
மனிதரிற் பலசாதி பேதங்க ளின்றியே
மனமொத்து வாழவேண்டும்
மனிதரறி விற்குமன் பிற்குமரி யாதைக்கும்
மாச்சரியமே செய்திடும்
மதமொடுபு ராணங்கள் செல்வச் செருக்குகளும்
மாறிநல மாகவேண்டும்
அநியாய மானதீண் டாமையினு டன்கிட்ட
அணுகாமை நீங்கவேண்டும்
அறிவுடைய ரெல்லாமும் உடையர்அறி வில்லாரென்
உடையரா யினுமிலாரென்
றுதிப் பறைக்குலத் திருவள்ளு வன்சொன்ன
அமுதமொழி தழையவேண்டும்
ஆண்மக்கள் பெண்மக்கள் தமையடிமை கொள்கின்ற
ஆதிக்க மொழியவேண்டும்
புனிதமா கியசுத்த வுணவையெவர் தரினுமன்
புடனுண்டு மகிழவேண்டும்
புனலுதவு கிணறுகுளம் மக்கள்யா வர்க்குமே
பொதுவா யிருக்கவேண்டும்

பொலிகடவு ளாலயங் களில்யாவ ருஞ்சென்று
போற்றுமா றமையவேண்டும்
பூசாரி தரகரில் லாமலே கடவுளைப்
போற்றினல் போற்றவேண்டும்
நனிமமதை கொண்டுமேற் சாதிகீழ்ச் சாதியெனும்
நாற்றத்தை மாற்றவேண்டும்
ஞாலத்தில் மக்களே தெய்வங்க ளெனநம்பி
நற்றெண்டு புரியவேண்டும்
நாட்டிலே ழைச்சிறுவர் சிறுமியர்கல் விகள்கற்று
ஞானமுற் றோங்கவேண்டும்
நமதுவைக் கம்வீர மெய்க்குருவி னன்புமதம்
நாளுமோங் கிடவேண்டுமே.

2. பாலருண வின்றிப் பசித்தழுது வாடிடப்
பாழான கல்லினுக்குப்
பால்பழம் பஞ்சாமிர் தாபிஷே கம்புரி
பழக்கங்க ளொழியவேண்டும்
பாரிலே ழையர்கட் டிடத்துணியி லாதிடர்ப்
பட்டிடக் கற்களுக்குப்
பட்டாடை யிட்டழகு பார்க்கின்ற முட்டாட்
பயித்தியம் தீரவேண்டும்
சீலமுள ஏழையர் தமைக்கண்டு நாய்கள்போல்
சீறிவிழ லொழியவேண்டும்
செத்தவர்க் காய்ப்புரோ கிதர்களுக் குத்திதிசெய்
தெளிவின்மை யகலவேண்டும்
சிந்தையினி லொன்றும்வெளி யொன்றுமாய்ப் பேசி
தேசிய மொழியவேண்டும் [டுந்

செகமக்கள் யாவரையும் ஒன்றுசேர்க் குந்திருத்
தொண்டர்தொண் டோங்கவேண்டும்
காலமெல் லாம்நல்ல காலமே யெனுமுண்மை
கண்டுதொழில் புரியவேண்டும்
கரிநா ளிராகுநாள் நல்லநாள் தீயநாள்
கட்டழிந் தோடவேண்டும்
கடவுட் கெனச்செலவி டும்பொருளை மக்களின்
கல்விக்கு மாற்றவேண்டும்
காசினியி லேழையர்கள் தமையடிமை கொண்டுநலி
கபடங்க ளொழியவேண்டும்
ஞாலமெல் லாமுமொற் றுமையுற்று மக்கள்நம்
பிக்கையுடன் வாழவேண்டும்
நாட்டேழை யர்க்குச்செய் தொண்டையே கடவுள்
றொண்டென்று தெளியவேண்டும் [நற்
நலிவுறும் விதவைகளெலாமறு மணஞ்செய்து
நன்றாக வாழவேண்டும்
நமதுவைக் கம்வீர மெய்க்குருவி னன்புமதம்
நாளுமோங்கிட வேண்டுமே.

சாற்றுக்கவி

கல்லூருணி வாலிப நாடார் சங்கக் காரியதரிசியும்,
சுயமரியாதை வீரரும், இந்நூலாசிரியரது ஆப்த நண்பருமாகிய

திருவாளர்

க. அ. புன்னைமுத்து நாடார் அவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழி நெடில்

விருத்தம்.

எளியர்தவத் தோன்றல்வைக் கம்வீரர்சுய
மரியாதை இயக்க சாரம்
தெளிவுபெறத் தாலாட்டொன் றியற்றிநமக்
கருளினன்தீண் டாமை சாதி
களின்மயக் கம்முதல் மூடப்பழக்கமெலா
மொழிந்துவெறுங் கடவுள் தொண்டை
எளியர்தொண் டாய்மாற்றித் தொண்
டாற்றிடும்வேங் கடசாமி யிளைஞரேறே.

சுயமரியாதைத் தாலாட்டு

1 அன்பே சமயம் அறிவே பிரமாணம்
மன்பதையே தெய்வமென வாழ்விக்க வந்தவரோ

2 ஈரோடு மாநகரி லேந்தல்வெங்க டப்பமுகில்
சீரார் திருமகவாய்ச் செகமீது வந்தவரோ

3 பிரமாதி யாண்டு பிறங்குபுரட் டாசிரண்டில்
அரியபுதன் நாளிலெமை யாளப் பிறந்தவரோ

4 கிருபா நிதியாம் கிருட்டிணசு வாமிமன்னன்
அரியதம்பி யாக அவதாரம் செய்தவரோ

5 புராதனரா மேழைமக்கள் புந்திமகிழ்ந் தின்புறவே
இராமசாமி யெனுநாமம் எழிலாகக் கொண்டவரோ

6 ஐந்து வயதினிலே யானபள்ளிச் சாலையினில்
நந்தலில்தீண் டாமையினை நாசமுறச் செய்தவரோ

7 குறவர் பறையர்சிறார் கூடவிளை யாடியவர்
சிறுதீன் தனைப்பறித்துத் தின்றாடல் செய்தவரோ

8 இந்திரசெல் வன்வீட்டி லேபிறந்து மேழைமக்கள்
தந்திடும்சிற் றுண்டியிலே சாலமகிழ் கொண்டவரோ

9 தீண்டாரைத் தீண்டியவர் தின்பண்டம் தின்னுமுன் [னை
வேண்டோமென் பாரைவென்று விளையாட வந்த [வரோ

10 பத்து வயதினிலே பள்ளிப் பயிற்சியைவிட்
டுத்திவா தங்கள்செய்தே யுண்மைகண்டு கொண்ட [வரோ

11 குருக்கள்சம யம்வேதம் கூறுபுரா ணம்சாதி
உருட்டைவென்று மெய்யறிவின் உண்மைநெறி கண்
[டவரோ

12 வடிவ மதனனென்ன வளர்காலேச் சற்குணியாம்
நொடிபுகழ்நா கம்மையரை நோக்கிமணம் செய்த
[வரோ

13 இல்லறந டாத்துமந்நா ளிருவோரும் நாட்டுமக்கட்
கெல்லேயில்லாத் தொண்டுசெய்வோம் எனவிரதம்
[கொண்டவரோ

14 இந்தியா நம்குடும்பம் இந்தியரெல் லாம்நமது
சொந்தமக்க ளென்றவர்க்குத் தொண்டுசெய்யத்
[துணிந்தவரோ

15 காந்தி மகானளித்த கட்டளேயைத் தஞ்சிரமேல்
எந்தித் திருத்தொண் டியற்றிடமுன் வந்தவரோ

16 மதுவிலக்குக் கோர்முறை தீண்டாமைவிலக் குக்கிரு
[கால்
கதரினுக்கோர் காலுயர்கா ராக்கிரகம் புக்கவரோ

17 சிறைச்சாலே மாதவந்தான் செய்சாலே யாய்மகிழ்ந்தே
நிறத்தோ டறம்வளர்க்கும் தீராய் வந்தவரோ

18 பன்றி கழுதைசெல்லும் பாதைமக்கள் செல்லவொ
[ண்ணு
தென்றிருந்த கொடுமையினே யெடுத்தெறிய வந்தவ
[ரோ

19 ஈரமற்ருேர் தங்களேவென் றேழையரைக் காத்துவைக்
வீரரெனும் திருநாமம் மேதினியிற் பூண்டவரோ [கம்

20 வைக்கம் தெருவில்மக்கள் வரவெண்ணு தென்றிருந்த
சிக்கலினேத் தீர்த்திடத்தன் தேவியுடன் சென்றவரோ

21 தெருவுரிமை யேழையர்க்குத் திறந்துவைக்க வோரி
அரிய சிறைபுகுந்த ஐயனே தாலேலோ [ருகால்

22 காங்கிரசே மக்கள் கதிமோக்ஷ மென்றுநம்பி
ஓங்குமுயர் தொண்டுசெய்த வுத்தமனே தாலேலோ

23 காங்கிரஸின் பேரால் கபடமுள்ள பார்ப்பனர்செய்
தீங்கனைத்து மாராய்ந்து தெரிந்துவெளி வந்தவரோ

24 உண்மையுழைப் பாளர்சிறை யுட்புகுந்து வாடவவர்
தம்மகிமை யால்பார்ப்பார் தாம்வாழ்தல் கண்டவரோ

25 காங்கிரஸ்பே ராலரசாங் கத்தைமிரட் டிப்பார்ப்பார்
வேண்டுமுத்யோ கங்கள்பெறும்விநய முணர்ந்தவ
[ரோ

26 பிரசங்க மேடையின்மேல் பேதமில்லை யென்றுசொல்
[வித்
தெருவில்வந்தா லோடென் றிடுஞ்சூதுங் கண்டவ
[ரோ

27 காந்திமகான் கோடி கணக்காய்ப் பொருள்சேர்த்துச்
சாந்தசத்தி யாக்கிரகம் தான்தொடங்கு நாளினிலே

28 கோடி பொருள்தொலைந்தும் கூறுமுப்ப தாயிரவர்
நீடுசிறை சென்றும்நம்மை நேராமை கண்டவரோ

29 காந்தி மகானுழைப்பும் கனபேர் சிறையிருப்பும்
சேர்ந்துபார்ப் பார்பிழைக்கச் செய்ததென்று தேர்ந்த
[வரோ

30 தேசமுன்னேற் றத்தினுக்காய்ச் செய்ததொண்டின்
[பேருரைத்து
மோசவகுப் பார்பிழைக்க முடிந்ததென்ற றிந்தவரோ

31 படித்தவகுப் பார்கள்பட்டம் பதவிசம்ப ளங்கள்பெ
[றக்

குடித்தனத்தார் தந்தலையில் கொள்ளிவைத்தல் கண்ட
[வரோ

32 மக்கள் தலையில் வரிமேல் வரிசுமத்திக்
கற்றோர்முன் னேறுவது காங்கிரசாய்க் கண்டவரோ

33 பொதுமக்கட் கோர்நன்மை யேனும் புரியவெனில்
முதிர்காங் கிரசொழிந்தால் முடியுமென்று சொன்ன
[வரோ

34 சாதிப் பெயரால் சடங்கு களின்பெயரால்
வேதப்பே ரால்புரியும் விப்பிரர்சூ தறிந்தவரோ

35 குருக்கள்பெய ரால்சமயம் கோயில்கட வுட்பெயரால்
இரக்கமற்ற பார்ப்பனர்செய் யிக்கட் டறிந்தவரோ

36 ஏழையர்க்கு வாய்த்தசர்க்கா வின்சங்கத் தாலியன்ற
வாழ்வினிலும் பார்ப்பனர்வாய் வைத்த தறிந்தவரோ

37 பார்ப்பனிய முள்ளமட்டும் பாரதத்தாய் மக்கள்நலம்
ஏற்பதில்லை யாதலினு லீதொழிப்பே னென்றவரோ

38 ஏழையர்க்கு நன்மைசெய்ய வென்னிலொரு தனியி
[யக்கம்
வாழ்வுபெறக் கண்டு வளர்த்திடல்நன் றென்றவரோ

39 உயர்வுதாழ் வின்றிமக்கள் ஒற்றுமையாய் வாழ்க
[வெனச்
சுயமரியா தைப்பெயர்கொள் தொல்லியக்கம் கண்
[டவரோ

40 கண்டவுடன் பார்ப்பனர்கள் காங்ரஸ்சுய ராஜ்ஜியப்
[பேர்
கொண்டுபுரி சூழ்ச்சியெல்லாம் கொன்றுபகை வென்
[றவரோ

41 சாதிமதம் போச்சுதென்றும் சாமிசெத்துப் போச்
[சுதென்றும்

வேதமொடு சாஸ்திரங்கள் வேள்விகெட்டு மாய்ந்த
[தென்றம்

42 ஆத்திகம்போய் நாத்திகம் ஆச்சுதென்றும் பாமரரை
எய்த்துப்பார்ப் பார்பிதற்றி யேக்கமுறச் செய்த
வரோ

43 இந்துமதம் நில்லாதிச் சுயமரியா தைக்கெதிரென்
றந்தரவிச் சுக்காரர் அலங்குலையச் செய்தவரோ

44 சுயமரியா தைச்சுடரோன் தோற்றத்தால் பார்ப்ப
[னிய
மயவிருள்கெட் டோடல்கண்டு மாமகிழ்வு கொண்ட
[வரோ

45 ஏழைமக்கள் தம்நலத்தை யெண்ணுத காங்கிரசால்
தாழ்வில்சுய ராஜ்யமிங்கு சாராதென் றுரைத்தவரோ

46 இந்தியர்க்குள் தீண்டாமை யென்பதொழிந் தால்
தனியாய்]
வந்துவிடும் சுயராஜ்ய வாழ்வென் றுரைத்தவரோ

47 படித்தவர்க ளேழையர்க்குப் பாங்காம் சமவுரிமை
கொடுத்துவிடில் சுயராஜ்யம் குதித்துவரு மென்றவ
[ரோ

48 சாதிபே தம்மதபே தங்களொழிந் தால்தனியே
ஓதுசுய ராஜ்யம்நமக் கோடிவரு மென்றவரோ

49 அதிகார வர்க்கத்தார் அட்டூழியமகன்றல்
புதியசுய ராஜ்யமலர் பூக்குமென்று சொன்னவரோ

50 ஒருகுலத்துக் கொருநீதி யோதுமனு நீதிசெத்தால்
பெருகுசுய ராஜ்யம் பிறக்குமென்று சொன்னவரோ

51 சாதிமதம் சாமிபெயர் சாற்றிப்பார்ப் பார்பிழைக்கும்
சூதொழிந்தால் சுயராஜ்யம் சுருக்கில்வரு மென்ற
[வரோ
52 செத்தவர்க்காய்ப் பார்ப்பனர்க்குத் திதிகொடுக்க
[வேண்டுமென்னும்
பித்தொழிந்தால் சுயராஜ்யம் பெற்றிடலா மென்றவ
[ரோ
53 எந்தமத மென்றறியா இந்துமத மெனும்பார்ப்பார்
சொந்தமத மொழிந்திடிற்சு யராஜ்யம்வரு மென்றவ
[ரோ
54 மக்கள்கற்றால் நாக்கறுத்து மாய்க்கவெனும் வேதமத
அக்கிரமம் நீங்கில்நமக் காண்மைவரு மென்றவரோ
55 உலைவாயி யங்காய்ச்சி புணர்செவிக்கூற் றென்றுரைக்
[கும்
புலைவேத மதமறிற்புண் ணியம்வளரு மென்றவரோ
56 பார்க்கின்ற கண்ணைப் பறித்தெறிக வெனும்வேத
மூர்க்கமதம் நாச முறவேண்டு மென்றவரோ
57 எண்ணுமிருதயத்தை யிரண்டாய்ப் பிளக்கவெனும்
கண்ணில் குருட்டுமதக் கட்டழிப்பே னென்றவரோ
58 இந்துமத வேதம்நம்மை எற்காதென் றால்நமக்கிங்
கந்தமதத் தால்பயனே தாமென் றிரைத்தவரோ
59 நாம்படிக்கக் கேட்க நமக்குரித்தில் லாவேத
வீம்பர்மதம் நாம்புகுதல் விபரீத மென்றவரோ
60 பத்திரத்தின் ஷாத்துகளைப் பாரான்கை யொப்பமிடல்
ஒத்ததுநா மிந்துமதம் ஒப்பலென்று சொன்னவரோ
61 தம்மதத்தார் கோயில்வந்தால் சாமிசெத்துப் போகு
[மென்றால்
அம்மதமோர் மதமென்ற லநியாய மென்றவரோ

62 இந்துமதத் திற்பார்ப்பா ரேயுயர்வென் ருல்பிறருக்
கந்தமதத் தால்நலமா மோவென் றறைந்தவரோ

63 இந்து மதமொழிந்தா லேயேழை மக்களெலாம்
சிந்தை மகிழ்ந்து தெளிவார்கா ணென்றவரோ

64 மக்கள் பகுத்தறிவை வளரவொட்டா மல்தடுத்து
வைக்குமதம் தனையழித்தல் மாணறமா மென்றவரோ

65 தன்னிடத்தி லுள்ளமட்டும் தாழ்த்தியன்ய மதம்
[சேர்ந்தால்
கண்ணியஞ்செய் வதுமோர்மதக் கட்டோகா
[ணென்றவரோ

66 பிறமதத்திற் சேர்வோர்க்குப் பெருமைதந்து தன்ன
[வரைக்
குறைசெய் வதுவுமதக் கூறேகா ணென்றவரோ

67 மக்கள்பால் செல்லுமன்பை மறுக்கின்ற சாதிமத
அக்கிரம வேரறுத்தல் அன்புமதமென்றவரோ

68 ஏழையர்பால் செல்லுமன்பை எதிர்க்கின்ற சாதிமத
ஊழல்களை வேரறுத்தல் உண்மைமத மென்றவரோ

69 தீண்டாமை யுண்டென்று செருக்கடிக்கு மாங்காரப்
பூண்டேயில் லாதொழித்தல் புண்யமத மென்றவரோ

70 செம்புசிலை தெய்வமென்று திகைக்காதீர் மக்களெலா
அம்புவிமேல் தெய்வங்க ளாமென் றுரைத்தவரோ [ம்

71 கல்லைக் கடவுளென்று கண்மயக்கம் கொள்ளாதீர்
வல்லமக்க ளேகடவுள் வடிவென் றுரைத்தவரோ

72 நெற்றிக் குறியினையும் நீண்டகொட்டை மாலையையும்
பற்றியொரு வனைமதிப்போன் பாமரனா மென்றவரோ

73 காவித் துணியினையும் கைபுனைமுக் கோலினையும்
பாவித்து ஞானியென்னல் பயித்தியமா மென்றவரோ

74. மொட்டைத் தலையினையும் முடியுடனே தாடியையும்
ஒட்டிமே லோரென்றல் உணராமை யென்றவரோ

75 வேடத்தைக் கண்டு விவேகியிவ னென்றுநம்பல்
மூடப் பழக்கமன்றி மூதறிவன் றென்றவரோ

76 மலந்தின்னும் கோழிதின்னும் மக்கள்கோ யிற்குள்
[வராக்
குலந்தாழ்ந்தோ ருண்டென்றல் கொடுமையென்று
[சொன்னவரோ

77 மக்கள் தமைக்கொடுமைக் குள்ளாக்கி வாழ்பவரே
மிக்கவரென் றுலவரால் விளைபயனே தென்றவரோ

78 இரக்கமின்றிப் பாமரரை யேய்த்துப் பிழைப்பவரே
தரைக்குளுயர்ந் தோரென்றால் தாழ்ந்தவர்யா ரென்
[றவரோ

79 பிச்சை யெடுப்போர் பெரியோரென் றால்சிறியோர்
இச்சகத்தில் யாரென் றெடுத்தியம்ப வந்தவரோ

80 நெற்றி வியர்வை நிலத்தில்விழ வுழைக்குமக்கள்
குற்றமுடை யோரென்றல் கொடிதுகொடி தென்றவ
[ரோ

81 பிறர்க்கும் தமக்கும் பெரும்பயனாய் வாழுகின்ற
திறத்தவரைக் கீழென்றல் தீதினுந்தீ தென்றவரோ

82 மலமிதித்தால் கால்கழுவி வாழ்மனைக்குள் ளேபுகு
[வோர்
குலமக்கள் கிட்டிவிடில் குளித்தல்கொடி தென்றவ
[ரோ

83 மலந்தின்னும் கோழிதின்னும் மக்கள்மக்கள் தமைத்
[தீண்டில்
சலந்தன்னில் மூழ்கல்மூட்டாள் தனமென் றுரைத்த
[வரோ

84 தாழ்த்தப்பட் டோருடம்பும் சாமியென்போர் தம்
[முடம்பும்
ஊத்தைப் புலாலென்னில் உயர்விதிலே தென்றவரோ

85 சதையெலும்பு ரத்தமலம் தாங்கும் உடம்புகளில்
இதுதாழ் விதுவுயர்வென் றிடல்மூட மென்றவரோ

86 குளிக்கு முடம்புசுத்தம் குளியா வுடம்பசுத்தம்
வெளிப்பகட்டே யன்றியுள்வே றுண்டோகா
[ணென்றவரோ

87 ஒடுக்கப்பட் டோர்தங்கட் குண்ணீர்ச் சுதந்திரமும்
கொடுக்கமறுத் தாலவர்கள் குளிப்பதெங்கே யென்ற
[வரோ

88 தாழ்த்தப்பட் டோர்தமக்குத் தண்ணீர்ச் சுதந்தரத்
[தை
வீழ்த்திவிட்டா லவருடல்வீ சாதோகா ணென்றவ
[ரோ

89 பலநாள் குளிப்பின்றிப் பார்ப்பானை வைத்தக்கால்
மலநாற்ற மன்றிமண முண்டோகா ணென்றவரோ

90 கற்றோ னறிவின்மிக்கான் கல்லா னறிவில்லான்
இக்கா ரணமன்றி யேதுவே றென்றவரோ

91 பகுத்தறிவுள் ளானறிஞன் பகுத்தறிவில் லானிழிஞன்
வகுத்தவகை யீதன்றி மற்றிலைகா ணென்றவரோ

92 பள்ளியுள்ளே சென்றுமக்கள் பயிலவொண்ணா
[தெனமறுத்தால்

பிள்ளைகளுக் கறிவெங்ஙன் பிறக்குங்கா ணென்றவ
[ரோ

93 தாழ்த்தப்பட் டோர்க்குள்ளே சாமிகளும் தலைவர்
[களும்

வாய்த்திருத்தல் கண்டறியா வண்ணமென்கா
[ணென்றவரோ

94 ஊன்கொளுடம் பெல்லாம் ஒரேவிதமா யமைந்திருக்க
நான்குவர்ணம் கற்பித்தல் நன்றோகா ணென்றவரோ

95 மக்களுள்ளே பேதம் வகுத்துப்பார்ப் பார்பிழைக்கத்
தக்கவண்ணம் புரிஜகஜா லப்புரட்டா மென்றவரோ

96 இந்தியா வைத்தவிர எந்தத்தே சத்தினிலும்
இந்தவர்ண பேதம் இலையென்று கண்டவரோ

97 மார்பிலே நூலும் மடிதாரும் கண்டுயர்ந்த
பேர்களா மென்றல்பெரும் பேதைமையா மென்றவ
[ரோ

98 மக்களுட லனைத்துமொன்றே வாய்த்த அறிவுமொன்
[றே
இக்கெதியில் பேதமெண்ண லேனோகா ணென்றவ
[ரோ

99 நமக்குழைப்போர் வறுமையினால் நலியநமைத் தாழ்த்
[திடுவோர்
தமைக்குப்பிட் டுதவல்சண்டா ளத்தனமா மென்ற
[வரோ

100 தம்மவர்க்கே பார்ப்பார் தருதல்கண்டும் தானதர்மம்
நம்மவர்கள் பார்ப்பார்க்கு நல்குவதேன் என்றவரோ

101 பசித்தவர்க்கி யாது பருத்ததொந்தி பார்ப்பனர்க்குப்
புசிக்கக் கொடுத்தல் புலையறமா மென்றவரோ

102 தன்னையுயர்ந் தோனென்று சாற்றம் பதடியைப் [போல்
சின்ன மனிதன் செகத்தினில்லை யென்றவரோ

103 பாலருண வின்றிப் பரிதவிக்கக் கல்லினுக்கும்
பாலபிஷே கம்புரிதல் பாதகமா மென்றவரோ

104 பலகோடி யேழைமக்கள் பசித்துழலக் கற்களுக்குப்
பலவிதநி வேதனம்பண் ணுதலறிவன் றென்றவரோ

105 கட்டுதுணி யின்றிமக்கள் கலங்கிடக்கற் சிலைகளுக்குப்
பட்டொடுபொன் னுடைகட்டல் பாவமென்று [சொன்னவரோ

106 ஏழைநங்கை மார்நகையொன் றின்றிமங்கக் கற்களுக் [குச்
சூழுநவ மணிபூட்டல் துரோகமென்று சொன்னவ [ரோ

107 குடிசையின்றி யேழைமக்கள் குலைகுலையக்கற்களுக்கு
நெடுங்கோயில் கட்டிவைத்தல் நிட்டூர மென்றவரோ

108 நடமாடுங் கோயிலெலாம் நனிவறுமை யால்வருந்தப்
படமாடுங் கோயில் கட்டல் பாவமென்று சொன்ன [வரோ

109 பேசுந்தெய் வங்கள்தெருப் பிச்சைகொள்ளப் பொம் [மைகளை
வீசுந்தே ரேற்றிவிழா வெடுத்தலக மென்றவரோ

110 மக்கள்கல்வி யின்றிமங்க வரும்பொருளெல் லாம் [பார்ப்பார்
பொக்கணத்தில் போடுதல்போக் கிலித்தனமா மென் [றவரோ

111 தாங்களே சாமிக்குத் தாகரென்று நமைமறித்து
வாங்குமிடம் வழிபறிப்போர் வாழுமிட மென்றவ
[ரோ

112 தங்கள்மதத் தவர்சமமாய்ச் சாமிகும்பி டக்கூடா
தென்றிருக்கு மிடங்கோயில் இலேபெய்வீ டென்ற
[வரோ

113 மெல்லியர்க்குப் பொட்டுக்கட்டி வீணுக்கு மிடங்
[கோயில்
அல்லவிப சார அரங்கென் றறைந்தவரோ

114 பார்ப்பனரேய்த் துப்பிழைக்கப் பண்ணிவைத்த
[கோயில்களைப்
பார்ப்பதுவும் பாதகத்திற் பாதகமா மென்றவரோ

115 இறைவனுள னேலவனெவ் விடத்துமிருப் பானவ
[னுக்
குறைவிடமொன் றுண்டெனலுள் சூதுகா ணென்
[றவரோ

116 தன்னைப்பூ சிப்பவர்பால் சாமி யுகந்திருக்கும்
என்னிலது சாமியல்ல என்றெமக்குச் சொன்ன
[வரோ

117 பூசனையை விரும்புவது புத்தியில்லார் செய்கை
'யெனில்
ஈசனுக்கும் பூசனைகள் ஏதுக்கா மென்றவரோ

118 எறும்புக்கு மீயான் இரவுபக லுஞ்சாமி
குறும்புக்குக் கும்பிடுவான் கோலமிது வென்றவ
[ரோ

119 தன்னடியார் போய்வணங்காச் சாமியொரு சாமி
[யென்று

சொன்னா லதைப்போல் துரோகமில்லை யென்றவ
[ரோ

120 ஏழைகளாம் தேவர்களிங் கேக்கமுறப் பலதலம்
[போய்த்
தாழ்மையுடன் வஞ்சகர்க்குத் தாலதர்ம மென்ற
[வரோ

121 புழுமலஞ்சேர் தண்ணீரில் புண்ணியதீர்த் தம்மி
[தென்று
முழுகி யெழுவோன் முழுமூட னென்றவரோ

122 மூர்த்திதல தீர்த்தமெனும் மோகமுற்று நாம்மயங்க
வாய்த்தல்பார்ப் பார்பிழைப்பின் மார்க்கமென்று
[சொன்னவரோ

123 கால்கழுவும் நீரையுண்டால் காண்பீர் பரமபத
மேலுலக மென்பார்வே டக்குருக்க ளென்றவரோ

124 தலைக்கட்டு வரியெமக்குத் தந்தால்வை குந்தமந்த
விலைக்குப் பெறுவிரென்பார் வீணரென்று சொன்
[னவரோ

125 எமக்குவேண் டும்பொருள்க ளீயிலுங்கள் பாதகங்
[கள்
உமைக்கடந்து செலுமென்பார் ஊத்தைமக்க
[ளென்றவரோ

126 நாங்கள்சொல்லும் மந்திரங்கள் நாவுரைத்த லன்றி
[யொன்றும்
நீங்கள்சொல்லொண் ணாதென்பார் நிட்டூர ரென்ற
[வரோ

127 எம்புதல்வர் கற்பதுபோ னும்புதல்வர் கற்க
[வொண்ணா
தென்பவன்சற் குருவென்றா விதுமோச மென்ற
[வரோ

128 பணத்திலே கண்ணைப் பறித்துநலம் சொல்லாத
குணக்கேடர் குருக்களென்றால் கோலமிது வென்ற
[வரோ

129 அம்புவியிற் பார்ப்பார்க் கதிற்சிலருக் கானகுரு
என்பவரை லோககுரு வென்பதெவ்வா தென்ற
[வரோ

130 ஒருசாதி யார்க்குமட்டும் உணவுதந்து மற்றவரைக்
கருதார் உலக குருவோகா ணென்றவரோ

131 எல்லா முணர்ந்தவரே யென்றிடினும் பார்ப்பனர்கள்
அல்லார்மே லன்றென்ன லவமான மென்றவரோ

132 ஒன்று மறிய வுணர்விலியா யினும்பார்ப்பான்
என்றா லுயர்ந்தோன் எனலகந்தை யென்றவரோ

133 தன்னலத்தை யெண்ணாது தாரணியி லேழைமக்கள்
தம்நலத்துக் குழைப்பவனே சற்குருவா மென்ற
[வரோ

134 உடல்பொருளோ டுயிரெளியர்க் குபகாரம் செய்
[யும்பொருட்டால்
விடுகின்ற தியாகியே வீரகுரு வென்றவரோ

135 மக்களெலா மொன்றாய் மதித்தெளியர்க் குபகரித்தல்
நற்கடமை யென்றுகொண்டோன் ஞானகுரு
[வென்றவரோ

136 தீண்டாமை யெனுங்கொடுமை தீர்த்துமக்கள் பால
[ன்பு
பூண்டா தரிப்போன் புவனகுரு வென்றவரோ

137 பொய்யின் களஞ்சியமாம் புராணப் புரட்டொழிந்
[தால்
வையமக்கள் மெய்யறிவு வளர்ச்சிபெறு மென்ற
[வரோ

138 சாதிமதச் சண்டைகளைத் தான்வளர்க்கும் சாத்திரத்
[தின்
கோதொழிந்தால் மெய்ஞ்ஞானம் கொழுந்தெடுக்கு
[மென்றவரோ

139 பார்ப்பார் பிழைக்கப் படைத்தபுரா ணங்களறில்
சீர்ப்பார் மிசைச்சமத்வம் திகழுமென்று சொன்ன
[வரோ

140 தன்னலத்தா ரெழுதிவைத்த சாத்திரத்தின் குப்பை
[யினை
மண்ணிலிடி லறிவுரமாய் வளருமென்று சொன்ன
[வரோ

141 மனப்பொருத்தம் பாராமல் மணப்பொருத்தம்
[பார்ப்பதெல்லாம்
பணப்பொருத்தம் பார்ப்பார்க்குப் பலிக்கவென்று
[சொன்னவரோ

142 நல்லநாள் கெட்டநாள் நாடித் திரிகின்ற
தெல்லாம்வீ ணேயென் றெடுத்தெமக்குச் சொன்ன
[வரோ

143 சூலம் சகுனம் தொடுகுறியா ரூடமுதல்
யாவும்பொய் நம்பாதீ ரென்றெமக்குச் சொன்னவரோ

144 பார்ப்பனியக் கொடுமையினைப் பாழாக்கி நம்மவரைக்
காப்பதற்கு வந்த கடவுளே தாலேலோ

145 சடங்குகளெல் லாம்பார்ப்பார் தாம்பிழைக்க வஞ்சக
[மாய்த்
தொடங்கியவை யென்றுணர்த்தும் சுடரொளியே
[தாலேலோ

146 சுத்தமுள்ளோர் சுத்த வுணவளித்தால் துய்ப்பதன்றி
அத்தைக் குறைசொல்வோ னறிவீன னென்றவரோ

147 உயர்சாதி யானெனுமோர் காரணத்தால் சுத்தமிலா
[ன்
கையிலுணவு கொள்வோன் கழிமூட னென்றவரோ

148 சமபந்தி போசனங்கள் தான்செயவொண்ணாதென்
[று
குமுறுவோர் தன்னலத்தின் குழுவென் றுரைத்தவ
[ரோ

149 பள்பறைய ருடனுணும்பார்ப் பான்பார்ப்பா
[னேயெனில்நாம்
பள்பறையோ டுடனுண்ணில் பழிப்பதே னென்ற
[வரோ

150 வெள்ளையருண் டிச்சாலே விடுதியிலுண் ணும்பார்ப்
[பான்
தள்ளுபடா னெனில்நம்மைத் தள்ளுவதே னென்ற
[வரோ

151 அன்புளா ரீயுமுண வற்பமே யானாலும்
இன்பவமு தீதென்ன எற்றலறம் என்றவரோ

152 அன்பிலா ரீயுமுண வாரமுதே யானாலும்
வெம்புவிட மென்ன வெறுத்தல் கடனென்றவரோ

153 பெண்மக்கள் தம்மிலுமாண் பிள்ளையுயர்ந்தோ
[னென்றல்
உண்மைக்கு மாறென் றுரைக்கவெளி வந்தவரோ

154 பெண்ணுக்கு மாணுக்கும் பேதங்கற் பித்துநல்ல
பெண்ணினத்தைத் தாழ்த்தல் பெரும்பாவ மென்ற
[வரோ

155 பெண்ணுணு மோர்வயிற்றி லேபிறந்தும் சொத்துரி
[மை

பெண்ணினத்துக் கில்லையென்றல் பெருமோச
[மென்றவரோ
156 கற்பதனைப் பெண்களுக்குக் கற்பனைசெய் தாண்க
[ளுக்குக்
கற்பில்லை யென்றல் கடுந்துரோக மென்றவரோ
157 பலபெண்ணைக் கூடுமாண் பரிசுத்தமாயிருக்கச்
சிலர்கூடும் பெண்களேன் சிறுமையுற லென்றவரோ
158 நினைத்திடமெல் லாமாண்கள் நெடிதுலவப் பெண்
[ணினத்தை
மனைக்கு ளடைத்துவைத்தல் மாமதிகே டென்றவரோ
159 மனையிழந்த புருடர்பல மணஞ்செய்து வாழ்ந்திடப்
[பெண்
இனமறும ணஞ்செய்யொண்ணா தென்றல்கொடி
[தென்றவரோ
160 * சதியிழந்த ஆடவர்கள் சம்ப்ரமாய் வாழ்ந்திடப்
பெண்
பதியிழந்தா லலங்கோலம் பண்ணுவதே னென்ற
வரோ
161 பெண்விதவை மறுமணங்கள் பெறவொண்ணா
[தென்றமிழ்த்தல்
கண்ணில் கசடர்புரி காரியமா மென்றவரோ
162 பெண்களுக்குக் கல்வி பெறவுரிமை யீயாமை
கண்கெடுத்துக் கொண்ட கதையாகு மென்றவரோ
163 பொய்யகற்றி மெய்வளர்த்துப் பூமிசைமாந் தர்க்கு
ழைக்கும்
கைவல் லியர்க்குநண்பாம் கதிரொளியே தாலேலோ
164 தண்ணளியா லேழைமக்கள் சமவுரிமை பெறவு
ழைக்கும்

---

* சதி—மனைவி. பதி—கணவன்.

கண்ணப்பர் நண்புகந்த கண்ணியரே தாலேலோ

165 சண்டாள ருடனுயர்ந்தோர் சாதியினு வில்லையென்ற
தண்டபா ணிக்குகந்த சற்குருவே தாலேலோ

166 பூமேல் மனிதரொன்றாய்ப் பொருத்தமுற வேயு
[ழைக்கும்
ராமநா தர்க்கினிய நண்பரே தாலேலோ

167 பார்ப்பனரல் லாதமக்கள் பார்ப்பனராற் படுந்துயரம்
தீர்ப்பதற்கு வந்த ருள்சிந் தாமணியே தாலேலோ

168 நாய ரொடுதியாக ராயர்பன காலிறைவர்
மூவர்களும் ஒருருவாம் மூர்த்தியே தாலேலோ

169 பகுத்தறிவிற் கிடையூறாய்ப் பாரிலுள்ள கோரமெல்
[லாம்
தகர்த்தெறியத் தயங்காத சற்குருவே தாலேலோ

170 குடியரசு தனையடையக் குவலயத்தார்க் குளவுரைக்
[கும்
குடியரசு தனைவளர்க்கும் கோமானே தாலேலோ

160 சதி—மனைவி. பதி—கணவன்.

171 படிமிசையோ ரஞ்ஞானம் பறந்துமெய்ஞ்ஞா னம்
[பொருந்தக்
குடியரசுத் தாள்வளர்க்கும் கொற்றவரே தாலேலோ

172 பார்ப்பனரல் லாருரிமை பற்றிவெற்றி யுற்றிடச்செய்
சீர்த்ததிரா விடன்வளர்க்கும் சீரியரே தாலேலோ

173 வகுத்தசுய மரியாதை மகாநாட்டுப் பந்தலின்மேல்
பகுத்தறிவுக் கொடியேற்றும் பாக்கியமேதாலேலோ

174 வாய்ந்தசெங்கல் பட்டுசுய மரியாதைப் பந்தலின்
[மேல்
ஓங்குபகுத் தறிவுகொடி யோடவிட்டீர் தாலேலோ

175 சௌந்தரபாண் டியனூர்க்குத் தலைமையளித் தேழை
[மக்கள்
சொந்தவுரி மைக்குழைக்கும் சூரரே தாலேலோ
176 தன்னலத்தால் பகிஷ்காரம் தனையொழித்துச் சை
[மனுக்கு
நன்னலஞ்சேர் வரவேற்பை நல்குமெந்தாய் தாலே
[லோ
177 பகிஷ்காரக் கூச்சல்களைப் பறக்கடித்துச் சைமனுக்கு
மிகுத்தவர வேற்பளித்த விற்பனரே தாலேலோ
178 ஏழைமக்கள் தம்முரிமைக் கிடையூறு யுள்ளவெல்
[லாம்
பாழ்படுத்தற் கஞ்சாத பராக்ரமரே தாலேலோ
179 சருவகலா வல்லர்செய்வா தத்தையெல்லா முத்திபில்
[வென்
றுரியபகுத் தறிவினுக்கே யுயர்வளித்தீர் தாலேலோ
180 தாணிமிசை யனைவருக்கும் சமவுரிமை யுதவுசுய
மரியாதைக் கொடிபடைத்த மன்னவரே தாலேலோ
181 தயவின்றி யேழையரைத் தாக்குகொடி யோரை
[வெல்லும்
சுயமரியா தைத்திகிரித் தோன்றலே தாலேலோ
182 பழக்கவழக் கங்களென்னும் பந்தமறுத் துண்மை
[யொளி
முழக்குசுய மரியாதை மூர்த்தியே தாலேலோ.

குடி அரசு பதிப்பக வெளியீடு.

1.	ஞானசூரியன்	0	8	0
2.	இதிகாச ஆராய்ச்சி அல்லது இராமாயணத்தின் ஆபாசம் (பாலகாண்டம்)	0	4	0
3.	இராமலிங்க சுவாமிகள் பாட்ல்திரட்டு	0	2	0
4.	சுயமரியாதைத் தாலாட்டு	0	2	0
5.	சோதிடக் கும்மி(அச்சில்)	0	2	0
6.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை ஒரு சிறந்த நாடகம் (அச்சில்)			
	சுயமரியாதைப் பாடல்கள்	0	2	0

கைவல்ய சுவாமிகள் கட்டுரை, குடி அரசுக் கோவை முதலியவைகள் விரைவில் வெளிவரும்.

மானேஜர்,

குடி அரசு பதிப்பகம்,

ஈரோடு.

குமரன் பிரஸ், காஞ்சீபுரம்.